முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அகில இந்திய அளவிலான ஆண்கள்,பெண்களுக்கான மின்னொளி கபாடி போட்டி நெல்லை மாவட்டம் திசையன்விளை அப்புவிளை கோவில் மைதானத்தில் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்ற ரெட் ஆர்மி அணிக்கு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பரிசுத்தொகை மற்றும் வெற்றி கோப்பை வழங்கினார்.உடன் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாவட்ட துணை செயலாளர் நம்பி,பொதுக்குழு உறுப்பினர் கனகராஜ் மற்றும் வி.எஸ்.ஆர்.சுரேஷ்,வி.எஸ்.ஆர். சுபாஷ் உள்பட பலர் உள்ளனர்.

## நெல்லை திசையன் விளையில் முதல்வர் பிறந்த நாள் விழா!

# இந்திய அளவிலான 50 அணிகள் பங்கேற்ற மின்னொளி கபாடி போட்டி!

### வெற்றி பெற்றவர்களுக்கு பேரவைத் தலைவர் மு.அப்பாவு பரிசுகளை வழங்கினார்!

நெல்லை, மே 23 - முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு நெல்லை மாவட்டம் திசையன்விளை அப்புவிளை கோவில் மைதானத்தில் அகில இந்திய அளவிலான 50 க்கும் மேற்பட்ட சிறப்பான அணிகள் பங்கேற்ற ஆண்கள்பெண்களுக்கான மின்னொளி கபாடி போட்டி நெல்லை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர்,இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர்,திட்ட குழு தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஏற்பாட்டில் 15.05.2025 முதல் 18.05.2025 வரை நான்கு நாட்கள் நடைபெற்றது. நிறைவு நாள் அன்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ரெட் ஆர்மி அணி வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற ஆண்கள், பெண்கள் அணிக்கு சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பரிசுத் தொகை மற்றும் வெற்றி கோப்பைகளை வழங்கினார்.

நெல்லை மாவட்டம் திசையன்விளை அப்புவிளை கோவில் மைதானத்தில் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு அகில இந்திய அளவிலான மின்னொளி மாபெரும் கபாடி போட்டி தினசரி இரவு 8 மணி அளவில் 15 ஆம் தேதி முதல் 18 ஆம் தேதி வரை (அதாவது வியாழன், வெள்ளி,சனி, ஞாயிறு)ஆகிய நான்கு நாட்கள் நடைபெற்றது.

அதன்படி போட்டி நிறைவு நாளான 18 ஆம் தேதி(ஞாயிற்றுக்கிழமை) இறுதி நாள் கபாடி போட்டி ஆண்கள் பிரிவு காலிறுதி ஆட்டதினை திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் அருள் முருகன், இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, அப்புவிளை முன்னாள் பஞ்சாயத்து தலைவர் வி.எஸ்.ஆர்.சுரேஷ், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் முரளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.கே.சி.பிரபாகர பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன்,கனகராஜ், மாவட்ட கவுன்சிலர் சாலமன் டேவிட் கல்லிடைக்குறிச்சி நகர செயலாளர் இசக்கி பாண்டியன்,முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வைகுண்டம் ஆகியோர் போட்டியினை துவக்கி வைத்தனர். பெண்கள் பிரிவு ஆட்டத்தினை கிறிஸ்தவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,இராதாபுரம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சௌமியா ஜெகதீஸ்,ஊராட்சி மன்ற தலைவர் கள் வாழ வந்த கணபதி, பொன்.மீனாட்சி அரவிந்தன்,ராதிகா சரவணகுமார்,சாந்தா மகேஷ்வரன். ஆகியோர் துவக்கி வைத்தனர்.

ஆண்கள் பிரிவில் கால் இறுதி ஆட்டத்தில் கிரீன் ஆர்மி அணியும் ஹரியானா லவ் அணியும் மோதின. இதில் ஹரியானா அணி 48 க்கு 35 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனை தொடர்ந்து நடைபெற்ற மதுரை கஸ்டம்ஸ் மற்றும் யாதவ் அகாடமி இடையேயான போட்டியில் யாதவ் அகாடமி அணி 51 க்கு 39 இந்த புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனை தொடர்ந்து நடைபெற்ற மூன்றாம் காலிறுதி ஆட்டத்தில் ரெட் ஆர்மி மற்றும் இன்கம்டேக்ஸ் சென்னை அணியின் மோதின.இந்த போட்டியில் 28 க்கு 18 புள்ளிகள் வித்தியாசத்தில் ரெட் ஆர்மி வெற்றி பெற்றது. நான்காம் காலேஜ் ஆட்டத்தில் டி.எம்.சி தானே மற்றும் பேங்க் ஆப் பரோடா அணிகள் மோதின.இந்த போட்டியில் பேங்க் ஆப் பரோடா அணி 30 க்கு 26 இந்த புள்ளியில் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.அதனை தொடர்ந்து நடைபெற்ற பெண்கள் கால் இறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு போலீஸ் மற்றும் சாய் சக்தி மும்பை அணிகள் மோதின.இந்த போட்டியில் 38 க்கு18 என்ற புள்ளி வித்தியாசத் தில் சாய் சக்தி மும்பை அணி வெற்றி பெற்றது.இரண்டாம் காலிரிதி ஆட்டத்தில் இமாச்சல் போலீஸ் மற்றும் ஐ.சி.எப் சென்னை அணியில் மோதின.பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் 39க்கு38 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஹிமாச்சல் போலீஸ் அணி வெற்றி பெற்றது. மூன்றாம் காலிறுதி ஆட்டத்தில் சென்ட்ரல் ரயில்வே அணி மற்றும் வி.எஸ்.ஆர்.இன்டர்நேஷனல் அணி மோதின.இதில் சென்ட்ரல் ரயில்வே அணி 29 க்கு17, புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனை தொடர்ந்து நடைபெற்ற கடைசி ஆட்டத்தில் நார்த் அண்ட் ரயில்வே அணி மற்றும் எஸ்.எம்.வி. கே.சி. அணி மோதின. இதில் நார்த் இந்தியன் வங்கி 29 க்கு 27 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.நடைபெற்ற ஆண்கள் அரை இறுதி போட்டியில் கிரீன் ஆர்மி மற்றும் யாதவா அகாடமி அணிகள் மோதின.இதில் யாதவ அகாடமி அணி 45க்கு 37 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இரண்டாம் அரை இந்தியா ஆட்டத்தில் ரெட் ஆர்மி அணியும், பேங்க் ஆப் பரோடா அணியும் மோதின.இதில் 3121 புள்ளிகள் வித்தியாசத்தில் ரெட் ஆர்மி அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.தொடர்ந்து நடைபெற்ற பெண்கள் பிரிவு அரை இறுதி போட்டியில் சாய் சக்தி மும்பை அணியும்,இமாச்சல் போலீஸ் அணியும் மோதின.இதில் இமாச்சல் போலீஸ் அணி 2320 என்ற புள்ளியில் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.இரண்டாம் முறை இறுதி போட்டியில் சென்ட்ரல் ரயில்வே அணியும்,நார்த்தன் ரயில்வே அணியும் மோதின.பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் நார்த்தன் ரயில்வே அணி 30 க்கு 29 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.தொடர்ந்து நடைபெற்ற பெண்கள் இறுதி போட்டியில் ஹிமாச்சல் போலீஸ் அணியும்,நார்தன் ரயில்வே அணியும் மோதின.இதில் 43க்கு 28 புள்ளிகள் வித்தியாசத்தில் ஹிமாச்சல் போலீஸ் அணி வெற்றி பெற்று முதல் பரிசை தட்டியது. ஆண்கள் பிரிவு இறுதி ஆட்டத்தில் ரெட் ஆர்மி அணியும்,யாதவ் அகாடமி நாக்பூர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.இதில் ரெட் ஆர்மி அணி வெற்றி பெற்று முதல் பரிசை தட்டி சென்றது.

போட்டியில் வெற்றி பெற்ற ஆண்கள்,பெண்கள் அணிகளுக்கு பரிசுத் தொகை மற்றும் வெற்றிக் கோப்பைகளை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

நிகழ்வில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, அப்புவிளை முன்னாள் பஞ்சாயத்து தலைவர் வி.எஸ்.ஆர்.சுரேஷ்,வி.எஸ். ஆர். சுபாஷ், ராதாபுரம் ஊராட்சி மன்ற கூட்டமைப்பு தலைவர் அனிதா பிரின்ஸ், மாவட்ட கவுன்சிலர்கள் கனகராஜ்,சாலமோன் டேவிட், மகேஷ் அருண் தவசு, ஒன்றிய கவுன்சிலர்கள் நடராஜன், இசக்கிபாபு, கெனிஸ் டென், காந்திமதி சுரேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் பொன் மீனாட்சி, பஞ்சவர்ணம், ராதிகா சரவணகுமார், சாந்தாமகேஸ்வரன், சேகர், வாழ வந்த கணபதி, வைகுண்டம், பொன் இசக்கி அல்போன்ஸ், அந்தோணி, பால்ராஜ், திடியூர் வீரமணிகண்டன், முன்னாள் லயன்ஸ் கவர்னர் சுயம்புராஜன் வர்த்தக அணி துணை அமைப்பாளர் முரளி,மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் சுப்பையா, ராம் கிஷோர், காமில், குமார்,திசையன் விளை பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர் நெல்சன், எழில் ஜோசப், ஸ்டாலின், சங்கர், சாகுல் ஹமீது, டென்னிஸ் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை நெல்லை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் செய்திருந்தார்.

தூத்துக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் ஆறு வகுப்பறை கட்டிடங்களையும், ஒரு ஆய்வக கட்டிடத்தையும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்ததையடுத்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், பகுதி செயலாளர் ராமகிருஷ்ணன் மற்றும் கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் 2026 தேர்தல் பணி சம்மந்தமாக சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மண்டல பொறுப்பாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார். கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறவுள்ளது.

| தேதி | நேரம் | சட்டமன்றத் தொகுதி | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| | காலை 9 மணி | செய்யூர் | சக்ரா திருமண மண்டபம். மேல்மருவத்தூர் |
| 28.05.2025 புதன்கிழமை | காலை 11 மணி | மதுராந்தகம் | எஸ்.எம்.ஜெ. மஹால். அச்சரப்பாக்கம். |
| | பிற்பகல் 2 மணி | உத்திரமேரூர் | தயா திருமண மண்டபம், மிலிட்டரி ரோடு, ஓரிக்கை, |
| | மாலை 4 மணி | காஞ்சிபுரம் | அருணா மஹால், காஞ்சிபுரம் |

மேற்கண்டவாறு நடைபெறும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர , நகர. ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள், சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், மாநில மாவட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.,**
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### அமைச்சர் அர.சக்கரபாணி – பிரகாஷ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, மே.23- கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மற்றும் சட்டமன்றத் தேர்தல் 2026 வேப்பனபள்ளி, ஒசூர், தனி சட்டமன்ற தொகுதி வாரியான கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ் தலைமையில் சூளகிரியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், சட்டமன்ற தேர்தல் மண்டல பொறுப்பாளருமாண அர.சக்கரபாணி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி, சட்டமன்ற தேர்தல் தொடர்பாக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தை சேர்ந்த வேப்பனபள்ளி,

ஒசூர், தளி சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த நிர்வாகிகள் வாக்காளர்களை வீடு, வீடாக சென்று நேரில் சந்தித்து கடந்த நான்காண்டுகளாக கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் செய்யப்பட்ட மக்கள் நலத் திட்டங்களான மகளிர் உரிமைத் தொகை, மகளிர் அரசு பேருந்தில் கட்டணம் இல்லா பேருந்து பயணம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம்,கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களை எடுத்துக் கூறி தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை விளக்க வேண்டும் எனவும், நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலில் ஏழாவது முறையாக திமுக ஆட்சியை அமைக்க அனைவரும் அயராது பாடுபட வேண்டும். கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்பதற்கு நீங்கள் அனைவரும் அயராது உழைக்க வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் அரியப்பன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் வடிவேல், மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி , புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன், ஒசூர் மாநகர துணை மேயர் ஆனந்தைய்யா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீராரெட்டி, எல்லோரா மணி, கிரீஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன் , சீனிவாசன்,

முனிராஜ், அப்துல் கலாம், தனலட்சுமி, அருணா பூசன், ஒன்றிய செயலாளர்கள் பாக்கியராஜ், நாகேஷ், ரகுநாத், கருணாகரன், ஸ்ரீனிவாசலு ரெட்டி, திவாகர், கஜேந்திரமூர்த்தி, சின்ராஜ், தணிகாசலம், ஸ்ரீதர், பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன், தஸ்தகீர் , ஒசூர் மாநகர அவைத்தலைவர் செந்தில்குமார், கோபாலகிருஷ்ணன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் , தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மாணவர் அணி

# திண்டுக்கல் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் **திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்** - திண்டுக்கல் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்**

**திண்டுக்கல் மாநகரம்**

அமைப்பாளர் - பி.கே.மதுசூதன், சி20, அரசு ஊழியர் குடியிருப்பு, பேருந்துநிலையம் எதிரில், திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் - 1) ச.சஞ்சிவ்குமார், 25-306 9வது தெரு மேட்டுப்பட்டி, திண்டுக்கல். 2) உ.ரஹ்மான், 64-65 பேட்டை ரோடு, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல். 3) சு.அசோக், 28-81ஏ பாரதிபுரம், நாகல்நகர் 1வது தெரு, திண்டுக்கல். 4) ஏ.ஆர்.கிஷோர், 1-4, முத்து நகர், ஆர்.எம்.காலனி, 4வது கிராஸ், திண்டுக்கல். 5) ஓ.வீரமணி, எம்.எல்-2, ஆர்.எம்.காலனி, 3வது குறுக்குத் தெரு, திண்டுக்கல். 6) ரா.புஷ்பலதா, 48-பி கோபால் நகர், ஒய்.எம்.ஆர்.பட்டி, திண்டுக்கல். 7) ர.கிஷோர்குமார், 37 மெங்கில்ஸ் ரோடு, நாகல் நகர், திண்டுக்கல். 8) பா.விவேக் ஜான்சன், வைத்தியலிங்கம் நகர் 2வது தெரு, மொட்டணம்பட்டி ரோடு, மேட்டுப்பட்டி திண்டுக்கல்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21-05-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

தேனி தெற்கு மாவட்ட உத்தமபாளையம் கோம்பையில் கிழக்கு ஒன்றியம் சார்பாக ஒன்றிய செயலாளர் அணைப் பட்டி முருகேசன் தலைமையில் பேரூராட்சி செயலாளர்கள் முருகன், முகமது காசிம். முன்னிலையில் நடைபெற்றது. இதில் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தலைமைக் கழக பேச்சாளர் வெள்ளைச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்கள். இக்கூட்டத்தில் ஏராளமானோர் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ காணை தெற்கு ஒன்றியம் மாம்பழப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த மறைந்த பேராசிரியர் R.நடராஜன் அவர்களின் உடலுக்கு மாலை அணிவித்து அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன் நகர செயலாளர் இரா. சக்கரை ஒன்றிய கழக செயலாளர்கள் ஜெ.ஜெயபால்,PVR.விசுவநாதன்,ஒன்றியக்குழு தலைவர் ஓம் சிவ சக்திவேல் மாநில பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜசேகர்,கிளை கழக செயலாளர்கள் ஏழுமலை,செந்தில், புஷ்பராஜ்,கழக நிர்வாகிகள் ரவி,குமார்,ராஜா,ராமமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.